JAMAL MOHAMED COLLEGE (AUTONOMOUS)
College with Potential for Excellence
Reaccredited (3rd cycle) with 'A' Grade by NAAC
(Affiliated to Bharathidasan University)
TIRUCHIRAPPALLI – 620 020.

# PRESS RELEASE

**Date: 23/03/2019**

Jamal Mohamed College (Autonomous) celebrated its **20th College Day** for Women on **23/03/2019.** The celebrations began with prayer and College songs by the students. The Principal, Dr. S. Ismail Mohideen presided over the function and presented the annual report. The Chief Guest **Dr. G. GopinathGanapathy,** Registrar, Bharathidasan University, delivered the 20th College day address. In his address, the Chief Guest emphasized that, in developing India, women students should achieve their goals by holding to proper policies and patience. He also insisted that, apart from focusing on success, the students should also imbibe qualities like sense of love, care, affection and brotherhood, which will fetch them permanent success in life. Further, he stressed that, students should develop necessary courage and prudential acumen to successfully overcome all obstacles in their life.The President, Haji M.J. Jamal Mohamed Bilal, The Secretary and Correspondent Dr. A.K. KhajaNazeemudeen, the Treasurer Haji M.J. Jamal Mohamed and the Assistant Secretary Dr. K. AbdusSamad offered their felicitations. Gold Medals, Prizes and proficiency certificates were distributed to **6** University rank holders and **129** College level toppers of various departments respectively by the Chief Guest along with the Secretary & Correspondent, Treasurer and Assistant Secretary of the College Management Committee. The Vice Principal Dr. A. Mohamed Ibraheem, The Additional Vice Principal Dr. M. Mohamed Sihabudeen and the Directors Dr. K.N. Abdul KhaderNihal, Dr. K.N. Mohamed Fazil, Professor M.A. Jamal Mohamed YasinZubeir and Ms. HajiraFathima organized the function in a grand manner. The Bursar, Dr. D. I. George Amalarathinam, proposed vote of thanks, which was followed by the cultural performances of the students.

**PRINCIPAL**

# ஜமால் முஹம்மது கல்லூரி (தன்னாட்சி)

நெ.7, ரேஸ் கோர்ஸ் சாலை, காஜா நகர், திருச்சிராப்பள்ளி – 20.

= = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = =
= = =

<u>பத்திரிகைச் செய்தி</u> நாள் : 23.03.2019

திருச்சி **ஜமால் முஹம்மது கல்லூரி**யின் பெண்கள் பிரிவினருக்கான 20வது கல்லூரி நாள் விழா இன்று (23.03.2019 – சனிக்கிழமை) நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக, திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் ஜி. கோபிநாத் அவர்கள் கலந்துகொண்டு கல்லூரி நாள் விழா உரை நிகழ்த்தி மாணவிகளுக்குப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார். வளர்ந்துவரும் இந்தியாவில் மாணவிகள் பொறுமையுடனும், கொள்கைகளுடனும் சாதிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். மேலும், வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக்கொண்டு செயல்படுவதோடு மட்டுமல்லாமல், அன்பையும்-அரவணைப்பு உணர்வோடும், சகோதரத்துவத்தோடும் உழைத்தால், நிரந்தர வெற்றி கிடைக்கும் என குறிப்பிட்டார். துணிச்சல் மிகுந்த விவேகம் வாழ்வின் வெற்றிக்கு வழிகோலும் என தெரிவித்தார். பல்கலைக்கழக அளவில் முதலிடம் பெற்ற 6 மாணவிகளுக்கு தங்கப் பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மேலும் ஒவ்வொரு துறையிலும் முதலிடம் மற்றும் இரண்டாம் இடம் பெற்ற 129 மாணவிகள் கௌரவிக்கப்பட்டனர். கல்லூரியின் தலைவர் ஹாஜி. எம்.ஜே. ஜமால் முகம்மது பிலால், செயலர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே. காஜா நஜிமுத்தீன், பொருளாளர் ஹாஜி. எம்.ஜே. ஜமால் முகம்மது, உதவிச்செயலர் முனைவர் கே. அப்துஸ் சமது ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற விழாவில், இயக்குநர்கள், முனைவர் கே.என். அப்துல் காதர் நிஹால், முனைவர் கே.என். முகமது ஃபாசில், பேராசிரியர் எம்.ஏ. ஜமால் முஹம்மது யாசீன் ஜுபைர், துணை இயக்குநர் செல்வி. ஜே. ஹாஜிரா ஃபாத்திமா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். முன்னதாக, கல்லூரி முதல்வர் அனைவரையும் வரவேற்று ஆண்டறிக்கை சமர்ப்பித்தார். 1000த்திற்கும் மேற்பட்ட மாணவ-மாணவிகள் இதில் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை துணை முதல்வர் முனைவர் ஏ. முகமது இப்ராஹீம் கூடுதல் துணை முதல்வர் எம். முஹம்மது சிஹாபுதீன் உள்ளிட்ட பேராசிரியர்கள் குழுவினர் செய்திருந்தனர். நிறைவாக, நிதியாளுநர் முனைவர் டி.ஐ. ஜார்ஜ் அமலரெத்தினம் அவர்கள் நன்றி கூறினார்.

**முதல்வர்**

# 20th College Day for Women - Photos




